# உயர் ரத்த அழுத்தம் குறித்த விழிப்புணர்வு : ஸ்ரீ பாலாஜி பல் மருத்துவமனைக்கு மத்திய அரசு விருது


## சேர்மன் நிஷா இளமாறன், இயக்குனர் இளமாறன் பெருமிதம்

சென்னை, மார்ச் 19–

உயர் ரத்த அழுத்தம் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஒரு மாத காலத்திற்கு நடைபெற்ற சிறந்த விழிப்புணர்வு பரப்புரை திட்டத்தை செயல்படுத்திய ஸ்ரீ பாலாஜி பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் விருது வழங்கி அங்கீகரித்துள்ளது.

அரசின் இந்த சிறந்த அங்கீகாரத்தைப் பெற்ற நான்கு கல்வி நிறுவனங்களில் மற்ற மூன்றும் மருத்துவக் கல்லூரிகளாகும்.

இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே பல் மருத்துவக் கல்லூரி என்ற பெருமையை ஸ்ரீபாலாஜி பல் மருத்துவக்கல்லூரி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இது விஷயத்தில் சேர்மன் நிஷா இளமாறன், இயக்குனர் இளமாறன் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்தனர். நாடு முழுவதும் உள்ள 800க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சுமார் 330 பல் மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒரு மாத கால விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த மத்திய அரசின் சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தி இருந்தது. இந்த விழிப்புணர்வு பரப்புரை திட்டம், கல்லூரியின் தலைவர் டாக்டர். ஜெ. ஸ்ரீ நிஷா, முதல்வர் டாக்டர். எம். எஸ். கண்ணன் மற்றும் பதிவாளர் டாக்டர். பூமிநாதன் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடந்தது.



# ஸ்ரீசந்திர பிரபு ஜெயின் கல்லூரி போட்டி: ‘ஏஜ’ மாணவி அஷ்மித் நிஷா அழகியாகத் தேர்வு

## பாடகி இசை வாணி மகுடம் சூட்டி வாழ்த்து

சென்னை, மார்ச். 19–

ஸ்ரீசந்திரபிரபு ஜெயின் கல்லூரியில் மகளிர் தின விழா பகவான் மகாவீர் கலையரங்கத்தில் இறைவணக்கத்துடன் நடைபெற்றது.

அழகிப் போட்டியில் இளங்கலை மின்னணு மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறை முதலாமாண்டு மாணவி அஷ்மத் நிஷா தேர்வு செய்யப்பட்டு, மகுடம் சூடி கௌரவிக்கப்பட்டார்.

சிறப்பு விருந்தினராக வருகைபுரிந்திருந்தபிரபலதிரைப்படப் பாடகி ‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியின் போட்டியாளர் இசைவாணியும் கல்லூரியின் தலைவர் நேமிசந்த் கட்டாரியா, செயலாளர் லலித்குமார் ஓ. ஜெயின், இணைச்செயலாளர் சுரேஷ் ரத்தோட், கல்லூரி முதல்வர் நா. சுஜாதா ஆகியோர் கல்லூரியின் இளங்கலை மின்னணு மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறைத் தலைவரும் கல்லூரி மகளிர் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளருமான ச. சத்தியா வரவேற்றார்.

"மாதராய் பிறந்திட மாதாவம் செய்திட வேண்டும் அம்மா"! என்ற தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பெண்களுக்கு பெருமை சேர்க்கும் கவிதை வரிகளை கல்லூரி முதல்வர் சுஜாதா நினைவு கூர்ந்ததார். பெண்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும். எந்த இடத்தில் விழுகிறோமோ, அதே இடத்தில் எழுந்து நின்று சாதனையாளராக மாற வேண்டும் என்றார்.

எதிர்வரும் தடைக்கல்லை உடைத்தெரிந்து முன்னேறுங்கள். எதிர்வரும் காலங்களில் ஒரு சாதனையாளர்களாக நீங்களும் நமது கல்லூரிக்கு ஒரு சிறப்பு விருந்தினராக வரவேண்டும் என்று தனது எண்ணத்தையும், ஆசையையும் பெரும் மகிழ்ச்சியோடு தனது உரையை நிறைவு செய்தார் அவர்.




கல்லூரி செயலாளர் லலித்குமார். ஓ. ஜெயின் பேசுகையில், பெண்கள் கல்வி பெற்று, அதிகாரம் பெற்றால் ஒட்டுமொத்த சமூகமும் முன்னேறும் என்று, நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த தொலைநோக்குப் பார்வையுடன் ஒவ்வொரு ஆண்டும் மாணவர் சேர்க்கையின் போது எங்கள் நிர்வாகம் அனைத்து மாணவிகளுக்கும் அவர்களின் மதிப்பெண்கள் அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல் ரூ. 2500 சிறப்புக் கட்டணச் சலுகையை வழங்குகிறோம் என்றார்.

கல்லூரியில் ஆண் பேராசிரியர்களைக் காட்டிலும் பெண் பேராசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இது கல்வித்துறையில் பெண்களின் பங்களிப்புக்கும் தலைமைத்துவத்திற்கும் நமது நிறுவனம் அளிக்கும் வலுவான ஆதரவைப் பிரதிபலிக்கிறது என்றார்.

கல்லூரித் தலைவர் நேமிசந்த் கட்டாரியா பாடகி இசைவாணிக்கு பொன்னாடை அணிவித்தார். கல்லூரி செயலாளர் லலித்குமார். ஓ. ஜெயின் நினைவுப் பரிசும், கல்லூரி முதல்வர் நா. சுஜாதா மணிமாலையும் அணிவித்து கௌரவித்தனர். இதனைத் தொடர்ந்து மாணவிகளுக்கான ஆடல் பாடல் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. கலைநிகழ்ச்சியினை அனைவரும் கண்டு களித்தனர்.

### அழகி அஷ்மித் நிஷா தேர்வு

கல்லூரி வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் ஆ. மேனகா இசை வாணியை அறிமுகம் செய்து பேசினார்.

மகளிர்தினத்தை முன்னிட்டு மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இசைக்கு ஏற்ப பாடல், தனிநபர் நடனம், மெகந்தி, பானை ஓவியம், முகெஒப்பனை, குழு நடனம், பாட்டுப்போட்டி என பல்வேறுப் போட்டிகள் நடைத்தப்பட்டன. போட்டிகளில் கலந்து கொண்ட மாணவியர்கள் தங்களது கலைத் திறமையை வெளிப்படுத்தினர். இந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு சான்றிதழும், சிறப்புப் பரிசும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கல்லூரிப் பேராசிரியர்களுக்கான போட்டிகளில், கலந்து கொண்டு வெற்றிபெற்ற பேராசிரியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. இளங்கலை வணிக நிர்வகச் செயலர் துறை பேராசிரியர் சே. அனிதா நன்றி கூறினார்.

# “பொதுப் பாதைக்கு மக்கள் தானமாக கொடுக்கும் நிலத்தை பதிவு செய்யுங்கள்”

## அரசுக்கு ரியல் எஸ்டேட் சம்மேளனத் தலைவர் ஆ.ஹென்றி கடிதம்

சென்னை, மார்ச். 18

அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் (பெயிரா) நிறுவனர் மற்றும் தேசியத் தலைவர் ஆ.ஹென்றி, தமிழ்நாடு பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவருக்கு, பொதுப் பாதை சம்பந்தப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணப் பதிவில் நிலவிவரும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கக் கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:–

‘‘தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உருவாக்கப்பட்டுள்ள மனைப் பிரிவுகளின் பின்பகுதியில் பொதுப் பாதையில்லாமல் அமைந்துள்ள விவசாய நிலங்களுக்கான வேளாண்மை பயன்பாட்டிற்கு தேவையான உரங்கள், இடுபொருள்களை கொண்டு செல்வதற்கும் மற்றும் உற்பத்தியான பொருள்களை சந்தைப்படுத்திடுவதை எளிமையாக்கும் வகையில் பொதுப் பாதை அமைத்து அனைவரும் பயன் பெற்றிட வேண்டும் என்கின்ற பொதுநல நோக்கில் அப்பகுதிவாசிகள் சிலர் ஒன்றிணைந்து நிலத்தை வாங்குகிறார்கள். அதைத் தாங்களாகவே முன்வந்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆக வழங்கிட விரும்புகிறார்கள்.



இந்நிலையில் சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தை அணுகும் பொழுது, சம்பந்தப்பட்ட நிலம் டிடிசிபி யின் அங்கீகாரம் பெற்றிருக்கும் பட்சத்தில் அரசாணையின் கீழ் ஆவணங்களை சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் தான பத்திரத்தை பதிவு செய்வதில் எவ்வித பிரச்சினையும் எழுவதில்லை.

அதேசமயம் சம்பந்தப்பட்ட நிலம் அங்கீகாரம் இல்லாமல் கிராமப் பகுதிகளில் அமைந்திருக்கும் பட்சத்தில் வட்டாரவளர்ச்சிஅலுவலரிடமிருந்தும், நகராட்சி பகுதிகளில் நகராட்சி ஆணையரிடமிருந்தும், பேரூராட்சி பகுதிகளில் செயல் அலுவலரிடமிருந்தும், அதுபோல் தற்பொழுது புதியதாக இணைக்கப்பட்டுள்ள மாநகராட்சிகளில், மாநகராட்சி ஆணையரிடமிருந்து அனுமதி பெற்றிட வேண்டும் அல்லது தடையின்மை சான்று பெற்றிட வேண்டும் என்கின்ற பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு வலியுறுத்துவதும் மேலும் பல்வேறு காரணங்களை தெரிவித்தும் சார் பதிவாளர்கள் பொதுப் பாதையாக்கான தான செட்டில்மெண்ட் (Gift Deed) ஆவணத்தை பதிவு செய்ய மறுக்கின்றனர்.

இதனால் தங்களது நிலத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆக வழங்க விரும்புவர்கள் ஆவணங்களை பதிவு செய்ய இயலாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக வேதனையுடன் தெரிவிக்கின்றனர். எனவே பதிவுத்துறை தலைவர் பொது மக்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆக வழங்க விரும்பும் நிலங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கான பொது பாதையாக கருதி ஆவணத்தை சார் பதிவாளர்கள் பதிவு செய்திடும் வகையில் முறையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து இதற்கான அதிகாரப்பூர்வ சுற்றறிக்கையை வெளியிட்டு உதவிட வேண்டும்.’’

இவ்வாறு அக்கடிதத்தில் ஆ.ஹென்றி கூறியுள்ளார்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter I, **ABINESH.J, S/o. Jaisankar, D.O.B: 25.03.2000, Aged 25 years, Permanently residing at 2/49A, Kambar Street, Valarpuram, Valarpuram Post, Sriperumbudur Taluk, Kancheepuram District, Tamil Nadu-602105.** intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings, High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

**ABINESH.J**

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, I, A. UMAMAHESHWAR, S/O: K. ARASAN, aged 39 years, permanently residing at No.3, Aayarpadi Jagan Mohan Nagar, Ashok Nagar Kovilpathagai, Avadi, Vellanur, Tiruvallur, Tamil Nadu – 600 062, intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**A. UMAMAHESHWAR**

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, I, VIDHYA. A, D/O: ANGAPPAN, aged 42 years, permanently residing at 12/37, G1, Maha Flats, 13th Street, B.V Nagar, Nanganallur, Chennai– 600061, intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**VIDHYA . A**

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, I, VARSHA BABU VATUL , D/O: BABU KRISHNAMOORTHY , aged 25 years, permanently residing at YASASWI NO. 1, 3RD CROSS STREET, DR RADHAKRISHNAN NAGAR, THIRUVANMIYUR, CHENNAI – 600041, intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**VARSHA BABU VATUL**



சிந்தி மொழி பேசும் மக்களின் இஷ்ட தெய்வமான ‘ஜூலேலால்’ ஜெயந்தி கல்லூரியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதற்கான சிறப்பு பூஜையில் கல்லூரியின் தலைவர் ராஜலால் நிச்சானி, செயலாளர் ஜே.சி. பிரகாஷ், பொருளாளர் துஷ்யந்த் மெஹ்ரா கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் த. பிரகலாதன், துணை முதல்வர் ச. ஷோபனா, ஒருங்கிணைப்பாளர் நா.சுப்பையா மற்றும் பேராசிரியர்கள் விழா நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.

# மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் பங்குனி மாத அமாவாசை ஊஞ்சல் உற்சவம்

செஞ்சி மார்ச் 19

மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் பங்குனி மாத அமாவாசை ஊஞ்சல் உற்சவத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோவிலில் நேற்று இரவு பங்குனி மாதம் அமாவாசை ஊஞ்சல் உற்சவம் நடைபெற்றது. இதை முன்னிட்டு நேற்று அதிகாலை மூலவர் அங்காளம்மனுக்கு பால், தயிர், இளநீர், தேன் உள்ளிட்ட பூஜைப் பொருள்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகமும் ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து அங்காளம்மனுக்கு தங்ககவசம் அணிவிக்கப்பட்டு மகா தீபாரதனை நடைபெற்றது.

இரவு 11.10 மணிக்கு மேளதாளம் முழங்க வடக்கு வாசல் வழியாக உற்சவர் அங்காளம்மன் சிறப்பு அலங்காரத்தில் கொட்டும் மழையில் ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்தருளினார். அப்போது ஊஞ்சல் மண்டபம் எதிரில் கொட்டும் மழையில் இருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் அங்காளம்மா, அங்காளம்மா, என கரகோஷத்துடன் அம்மனை வழிபட்டனர். இரவு 12.20 மணிக்கு ஊஞ்சல் உற்சவம் முடிந்து அம்மனுக்கு தீபாராதனை நடைபெற்றது. இதையடுத்து உற்சவர் அங்காளம்மனைகோயில் மண்டபத்திற்கு கொண்டு சென்றனர்.

ஊஞ்சல் உற்சவத்தில் இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் சிவலிங்கம் மற்றும் விழுப்புரம், கடலூர், சேலம்,வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும்,புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, ஆகிய மாநிலங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் சக்திவேல்,அறங்காவலர் குழுத்தலைவர் ஏழுமலை,அறங்காவலர்கள் சுரேஷ் மதியழகன்,பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம், மேலாளர் சதீஷ், கணக்கர் மணி உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர். விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்சாய் பிரணீத் மேற்பார்வையில் செஞ்சி டிஎஸ்பி ரமேஷ் ராஜ் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் விழுப்புரம் கோட்டத்தின் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.



**சென்னை மீனாட்சி மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் லிமிடெட்**
(முன்பு தேவகி மருத்துவமனை லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
CIN : L85110TN1990PLC019545
பதிவு அலுவலகம்: புதிய எண்.70, (பழைய எண். 149), லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004.
Phone No. 044-42938938; Fax: 044 -24993282 ; Email: cmmhospitals@gmail.com; Website: www.cmmh.in

**காகித வடிவிலான பங்கு பத்திரங்களை மாற்றுவதற்கும் மற்றும் டிமேட் செய்வதற்குமான சிறப்புச் சாளரம்**

ஜனவரி 30, 2026 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண். SEBI/ HO/38/13/11(2)2026–MIRSD–POD/ 1/3750/2026–ன் படி, ஏப்ரல் 01, 2019–க்கு முன்பு விற்கப்பட்ட/வாங்கப்பட்ட சென்னை மீனாட்சி மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் லிமிடெட்டின் ("நிறுவனம்" அல்லது "CMMHL") காகித வடிவிலான பங்கு பத்திரங்களை மாற்றுவதற்கும் மற்றும் டிமேட் செய்வதற்கும் பிப்ரவரி 05, 2026 முதல் பிப்ரவரி 04, 2027 வரை ஒரு வருட காலத்திற்கு ஒரு சிறப்புச் சாளரம் (Special window) திறக்கப்பட்டுள்ளது என்று பங்குதாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஆவணங்களில் உள்ள குறைபாடுகள்/செயல்முறைகள் அல்லது வேறு காரணங்களால் முன்பு சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட/திருப்பி அனுப்பப்பட்ட/கவனிக்கப்படாத பரிமாற்றக் கோரிக்கைகளுக்கும் இந்த சிறப்புச் சாளரம் பொருந்தும்.

மேற்கூறிய செபி சுற்றறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளபடி, முழுமையான மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களையும் CMMHL–ன் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (RTA), அதாவது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், 'சுப்பிரமணியன் பில்டிங்', எண்.1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை – 600 002 என்ற முகவரியில் சமர்ப்பித்து, பங்குதாரர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

RTA–ஆல் ஆவணங்கள் அனைத்தும் சரியாக இருப்பதை உறுதிசெய்தவுடன், மாற்றப்படும் பத்திரங்கள் டிமேட் முறையில் மட்டுமே பெறுபவருக்கு வரவு வைக்கப்படும். மேலும் இவை பரிமாற்றம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு லாக்–இன்னில் (Lock–in) வைக்கப்படும். இந்தக் காலகட்டத்தில் அத்தகைய பத்திரங்களை மாற்றவோ அல்லது அடமானம் வைக்கவோ முடியாது.

மேலும் விவரங்களுக்கு, பங்குதாரர்கள் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டை +91–44–40020700/742; +91–44–28460390 என்ற எண்களிலோ அல்லது cameo@cameoindia.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

குழு உத்தரவின்படி
சென்னை மீனாட்சி மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் லிமிடெட்டிற்காக
(ஒப்பம்/–)

தேதி: மார்ச் 19, 2026 எம்.எஸ். அனந்த லட்சுமி
இடம்: சென்னை நிறுவனச் செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி



## புதுக்கோட்டை, விராலிமலைத் தொகுதியில் போட்டியிட

# ஓய்வுபெற்ற செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை தி.மு.க. இளைஞரணி முன்னாள் மாவட்ட துணை அமைப்பாளர் மதியழகன் திமுக தலைமைக் கழகத்தில் விருப்ப மனு

புதுக்கோட்டை, மார்ச் 18

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, புதுக்கோட்டை மற்றும் விராலிமலை ஆகிய தொகுதிகளில் ஏதேனும் ஒன்றில் போட்டியிட வாய்ப்பு கோரி, திமுக தலைமை கழகப் பேச்சாளரும், முன்னாள் மாவட்ட இளைஞரணிச் செயலாளருமான வழக்கறிஞர் ரெ. மதியழகன் விருப்பமனு தாக்கல் செய்துள்ளார்.

புதுக்கோட்டை மச்சுவாடி பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் ரெ. மதியழகன், கடந்த 1983ஆம் ஆண்டு புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் மாணவர் திமுக தலைவராகத் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியுள்ளார். 1983 மற்றும் 1986ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் பங்கேற்று புதுக்கோட்டை மற்றும் திருச்சி சிறைகளில் சிறைவாசம் அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



தற்போது 61 வயதாகும் மதியழகன், புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற உறுப்பினராகவும், புதுக்கோட்டை மற்றும் தஞ்சை மாவட்டத் தொடர்பு அதிகாரியாகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது முழுநேர அரசியலில் ஈடுபட்டு வரும் இவர், ஆரம்பக் காலம் முதல் இன்று வரை திமுகவிற்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்.

விராலிமலை தொகுதியைப் பொறுத்தவரை, திமுக சார்பில் போட்டியிட மதியழகனுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகக் கட்சி வட்டாரங்களில் பேசப்படுகிறது. அதேவேளையில், புதுக்கோட்டை தொகுதியில் டாக்டர் முத்துராஜா, டாக்டர் முத்துக்கருப்பன், முன்னாள் எம்.பி. அப்துல்லா மற்றும் புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த கார்த்திக் தொண்டைமான் ஆகியோரிடையே கடும் போட்டி நிலவும் சூழலில், சீனியர் என்ற அடிப்படையில் மதியழகன் பெயரும் பரிசீலனையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், நீண்ட காலக் களப்பணி மற்றும் சிறைவாச அனுபவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ரெ.மதியழகனுக்கும் போட்டியிட வாய்ப்பு கிடைக்க கைகூடி வருவதாகவும் பேசப்படுகிறது. புதுக்கோட்டை விராலிமலையில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்று ரெ.மதியழகன் எதிர்நோக்கி உள்ளார்.